# அரிவாட்டாய நாயனார்

*முனைவர் கி.சாந்தினி*
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஜி.டி.என்.கலைக்கல்லூரி, திண்டுக்கல்

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5005

உலகில் உள்ள மக்கள் அனைவருக்கும் பொதுவாகக் கடவுள் உணர்ச்சி உண்டு. மனிதனுக்குரிய உணர்ச்சிக் கூறுகள் பலவற்றுள், கடவுள் பற்றிய உணர்ச்சிக் கூறும் இயல்பாகவே அமைந்துள்ளது. பாலினுள் கலந்துவிட்ட நீரைப்போல, மனிதனிடமிருந்தும் கடவுள் பற்றிய உணர்வு நீக்கமற நிறைந்துள்ளது.

உலகில் தோன்றிய அனைத்து சமயங்களும் அன்பை நிலைநிறுத்தி, அறத்தை வலியுறுத்தி ஒற்றுமையை ஊன்றிவிடவே ஏற்பட்டன என்றாலும் தொன்மை வாய்ந்தது இந்து சயயம். இந்து சமயத்தின் விழியாய் விளங்குவது வைசம். பிறவா யாக்கைப் பெரியோனாகிய சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுகின்ற சமயமே சைவ சமயம் எனப்படும். சைவ சமயத்தைத் தழைக்கச் செய்தவர்களே அறுபத்தி மூன்று நாயன்மார்கள். இவர்களால், தமிழ்மொழியும் புத்துயிர் பெற்றது. நமக்கெல்லாம் நாயான்மார்கள் நல்லுதாரணங்களாகத் திகழ்கிறார்கள். அவர்களது வாழ்க்கை வரலாறுகள் சிறந்ததொரு படிப்பினையைக் கற்றுத்தர வல்லன.

நாயன்மார்களை இல்வுலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டக் கூடிய இப்பதிவில் அரிவாட்டய நாயனாரைக் குறித்து எழுதுவது எனக்குக் கிடைத்த பெரும்பேறாகும்.

### அரிவாட்டாய நாயானாரின் பக்தித்திறம்

**முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்**
**நன்னெறி யேசரன் ஆதல் திண்ணமே**
**அன்னெறியே சென்றால் கடைந்த வாக்கெலாம்**
**நன்னெறி யாவது நமச்சி வாயவே**

என்ற திருநாவுக்கரசரின் கூற்றுப்படி, எப்பொழுதும் சிவபிரானை மறவாமல் மனதுக்குள் தொழுது கொண்டிருக்கும் பண்புடைய ரயனார் சிறு வயதிலிருந்தே மிகச் சிறந்த சிவத்தொண்டராவர். சிவபெருமானுக்கு செந்நெல்லான இனிய அமுதோடு, செங்கீரையும், மாவடுவும் கொண்டுவந்து நாள்தோறும் அமுது செய்விப்பவராய் விளங்கினார்.

தனது அன்பர்களை இறைவன் சோதிப்பது இயல்புதானே? செல்வம் பெருகிய நிலையில் இத்தகைய திருத்தொண்டு ஆற்றும் தாயானார் வறுமையுற்ற காலத்தும் திருவமுது செய்வித்தலைக் காணும் வகையில் அவரிடம் இருந்த செல்வம் எவ்வாறு நீங்கிற்று என்பதனை அறியாதவாறு சிவபெருமான் மாற்றினார். அந்நிகழ்வை,

**மேவு செல்வம் களிறுண் விளங்கனி**
**ஆவது ஆகி அழியவும்**[1]

என்று சேக்கிழார் பெருமகனார் அருமையாக உவமிக்கிறார். யானை என்று சொல்லப்படும் நோய் தாக்கப்பட்ட விளங்கனியின் உள்ளே காணப்படும் சுளைப் பகுதியானது வறண்டு விடுவதைப் போல நாயனாரின் செல்வம் பிறர் அறியாதவாறு மறைந்தது என்று நயமாகக் குறிப்பிடப்படுகிறது.

கல்லாகிய தன்னை இறைவன் செதுக்குகிறார் என்பதை அறியாத நாயனார், தான் இறைவனுக்குச் செய்யும் கடமையிலிருந்து தவறவில்லை. நெல்லறுக்கக் கூலி வேலைக் குச் செல்கிறார். தாம் கூலியாகப் பெற்ற உயர்ந்தவகையானசம்பாநெல்டியெல்லாம் சிவபெருமானுக்கு திருவமுது ஆக்கிவிட்டு, கூலியாகப் பெற்ற கார் நெல்லைத் தாம் உண்ணும் உணவாக்கியும் ஒழுகலானார்.

வைரத்திற்குப் பட்டைத் தீட்டுதல் ஆரம்பமாகிறது. சோதனை அதிகமாகிறது. அவ்வூரில் உள்ள வயல்கள் யாவும் இதற்கு முன்பு காணப்பட்டதைவிட அதிகமாக செஞ்சாலி நெல் விளங்க மகிழ்ந்து நாயனார் அறுவடை செய்த கூலி நெல் கொண்டு, இஃது அடியேன் செய்த புண்ணியப் பேறு என்று எண்ணி, இன்று சிவபெருமானுக்குரிய திருவமுதாக்கி உவந்தார்.

நாள்தோறும் நாயனார் உண்பதற்கு நியமம் கொண்டிருந்த கார் நெல் காணாமையால் மனையின் தோட்டத்தில் சென்று அவரது மனைவியார் தம் கைகளால் கீரைகளைக் கொய்து சமைத்து, உண் கலத்தில் இட்டு வைக்க, பெருந்தகையாளரான நாயனார் அதை மட்டும் அருந்தித் தாம் படைக்கும் திருவமுதுத் திருத்தொண்டினைத் தடங்கல் இல்லாமல் சிறப்பாகச் செய்து வந்தார்.

மனையின் பக்கத்தில் உள்ள கீரை வற்றிக் காய்ந்து அழிய, நாயனாரின் மனைவியார் அவருக்கு நீரை வளர்க்க, அதனையே உணவாக அமுது செய்து சிவபிரானுக்ககுத் திருவமுது செய்வித்து வரலானார்.

**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே**

என்ற திருமூலரின் வாக்கும்படி அன்புருவமாய் அமர்ந்திருந்த நாயனாரின் பெருமையை உலகறியும் திருநாள் வந்தது.

தாம் முன்னர்ச் செய்து வந்தது போன்று சிவபிரானை அமுது செய்வித்தற்கு அன்பே வடிவமாகி தூய செந்நெல்லாசி, மாவடு, கீரை ஆகியவற்றை ஒரு கூடையில் சுமந்து கொண்டு, பிறவித் துன்பத்தைப் போக்கும் மனத்துடையராகிய திருத்தொண்டர் முன்னே செல்ல, பின்னே அவர் துணைவியார் பஞ்ச கவ்வியத்தை ஏந்திச் சென்றார்.

நாயனார் இவ்வாறு செல்லும் போது பசிக் களைப்பால் சோர்ந்து, கால்தளர்ந்து, தவறிக் கீழே சாயத் தலைப்பட்டார். அந்நிலையைக் கண்டு, பின்னே பஞ்ச கவ்வியத்தை ஏந்திச் சென்ற அவரது மனைவியார் அப்பாத்திரத்தை மூடியுள்ள கையால் அன்புடன் தம் கணவர் கீழே விழாதபடி அணைத்துப் பற்ற, நாயனார் ஏந்திய கூடையிலிருந்த செந்நெல்லரிசி, கீரை, மாவடு என யாவும் தரையில் சிதறிப் பிளப்பில் விழுந்தன. அதனைக் கண்ட திருத்தொண்டர்,

**நல்ல செங் கீரை தூய**
**மாவடு அரிசி சிந்த**
**அல்லல் தீர்ந்து அளவல்லார்**
**அமுதுசெய்து அருளும் அப்பேறு**
**எய்திடப் பெற்றிலேன் என்று**

***ஒல்லையில் அரிவாள் பூட்டி***
***ஊட்டியை அரியல் உற்றார்[2]***

சிவபெருமானுக்கு தாம் இடையறாது செய்து வந்த திருத்தொண்டு தடைபட்டதால் தம் உயிரையே துறந்துவிட எண்ணிய நாயனாரின் பக்தித் திறத்தை என்னவென்பது?

பிறவி வேரை அரியவரை ஒத்த தாயனார், தம்மை அடிமை கொள்ளும் தலைவரான சிவபிரான் ஈண்டு அமுது செய்திலரே என்று பெரிதும் வருந்தியவராய்ப் பூட்டிய அரிவாளைப் பற்றிக் குற்றமற விரவிப் பரவும் அன்புள்ளம் கொண்டவராய்த் தம் கழுத்தின் குரல்வளையை அரிவாராயினார் என சேக்கிழார் பெருமகனார் அச்சம்பவத்தைப் பெருமைப்படுத்துகிறார்.

**அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**
**புன்கணீர் பூசல் தரும்[3]**

ஏன்ற பொய்யாமொழிப் புலவரின் கூற்றை மெய்ப்பிப்பது போல, மாசில்லாத சிந்தையுடைய அன்பரான தாயனார் தம் சமூகத்தை அரியத் தொடங்கிய நிலையில், குற்றமற்ற வண்மையுடைய அடியவர் கையைத் தடுக்கும் வகையில் திருவம்பலத்துள் திருநடனம் புரியும் நடராசப் பெருமான் தாம் வீசியாடும் சிவந்த மலர் போன்ற கையால் பற்றினார். அதே சமயம்,

***மாவடு விடேல் விடேல் என்று***
***ஓக்கவே எழுந்த தன்றே[4]***

என்ற பெரிய புராண அடிகள் கூறுவதைப் போல, சிவபிரான் மாவடுவைக் கடித்துச் சுவைக்கின்ற விடேல் விடேல் என்னும் ஓசையும் தரைப் பிளப்பிலிருந்து எழுந்தது.

சிவபெருமானின் திருக்கையானது அரிவாளைப் பற்றியுள்ள தாயனாரின் கையைப் பிடித்தபோது, ஊறு நீங்கப்பெற்ற அடியார் வெவ்வினை கெட, மகிழ்ச்சி நெடிது விளங்க, ஈசன் புரிந்த கருணையை நோக்கிக் கைக்கூப்பி நின்றார். அடியவரின் மெய்யுணர்வு இல்லாத தன்மையைக் கண்டும் அடிமை கொள்ளுமாறு பூமியின் வெடிப்பின் இடையே வந்து இங்குத் திருவமுது செய்த பரமனே போற்றி! உமாதேவியைகப் பாகமாக உடைய தூய நற்சோதியே போற்றி! திருவெண்ணீறு பொலியப் பூசிய பவளம் போன்ற சிவந்த மேனியும், சுருள் கொண்டு விளங்கும் சடைமுடியும் உடைய தொன்மையனே போற்றி! என்று துதித்தார்.

தாயனார் ஈசனைத் துதித்துப் போற்றவும், எம்பெருமான் இடப வாகனராகத் தோன்றி,

***நன்று நீபுரிந்த செய்கை***
***நண்ணுத லுடனே கூட***
***என்றும் நம்முலகில் வாழ்வாய்[5]***

என்று அருளிச் செய்தார். அரிவாளைக் கழுத்தில் பூட்டி அரிந்ததால் அரிவாள் தாயார் என்பது அவருடைய தூய பெயர் ஆயிற்று.

அருந்தவத் தரும் அஞ்செழுத் சோதினால் என்று நற்றமிழ் வல்ல நாவுக்கரசுப் பெருமானும் அழகாய்ப் பாடுவார். நன்னெறி காட்டவல்ல நமச்சிவாயமே உத்தமர்களை தவநெறியில் உயர்த்த வல்லது. நுமச்சிவாயத்தை ஓது வதைவிட மேலான தவம் வேறில்லை என்பதை அரிவாட்டாய நாயனாரின் வரலாறு நமக்கெல்லாம் எழுத்துரைக்கிறது.

### சிவபெருமானின் அருட்செயல்கள்

**சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை**
**அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை**
**புவனம் கடந்தன்று பொன் னொளி மின்னும்**
**தவளச் சடைமுடித் தாமரை யானே**

என்று திருமூலர் சிவபெருமானின் பெருமைகளை வியந்தோதுவார். அரிவாட்டாய நாயனார் வரலாற்றிலும் சிவபெருமான் அருட்செயல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. புடம் போடப்போடத் தங்கம் மின்னுவதைப் போல, தன் மெய்யன்பர்களின் பக்தித் திறத்தை உலகறியச் செய்வற்காகப் பல திருவிளையாடல்களை அவர் நிகழ்த்துகிறார்.

இறைவனுக்கு தாம் செய்துவந்த தொண்டு தடைப்பட்டதை நினைத்து வருந்திய நாயனார், அதற்காகத் தன் உயிரைவிடத் துணிகிறார். அவர் தம் கழுத்தை அரிய முற்படும்போது, இறைவனின் கரம் வந்து தடுக்க, அதேசமயம் இறைவன் திருவமுதை ஏற்றுக்கொண்டார் என்பதை நாயனார் அறிந்து கொள்ளும் விதமாக மாவடுவை அவர் கடிக்கும் ஒலியும் ஒருசேர திருவருள் பாலித்தார் எனக் குறிப்பிடப்படுகிறது. குழந்தையின் தவிப்பைப் பொறுத்துக் கொள்ள முடியாத தாயுள்ளம் அங்கு வெளிப்படுவதைக் காண்கிறோம். இங்கு

**எந்தெந்த நாளும் எனைப் பிரியாது என்னுயிராய்ச்**
**சிந்தை குடிகொண்ட அருள்தேவே பராபரமே**

என்று தாயுமானவர் போற்றுவது நினைவு கூரத்தக்கதாகும். "சிவாயநம" என்னும் மந்திரம் சிவபெருமான் திருவடிகளில் நம்மைச் சேர்த்து வைக்கும் என்பது உறுதி. சிவனது திருநாமமாகிய இந்த மந்திரத்தை நாளெல்லாம் ஓதி வருதல் வேண்டும். அவ்விதம் ஓதுவதே பெருந்தவமாகும். நிலைத்த வாழ்க்கையையும் நிலையான பேரின்பத்தினையும் கொடுக்கவல்லதாகும். இறுதியில் தாயனார் ஈசனைத் துதித்துப் போற்றவும் எம்பெருமான் இடபவாகனராகத் தோன்றி,

**நன்று நீ புரிந்த செய்கை**
**நன்னுத லுடனே கூடி**
**என்றும் நம்உலகில் வாழ்வாய்[6]**

என்று அருள்கிறார். அக்கணத்திலேயே நாயனார் தம் திருமனைவியோடு சிவலோகத்தை அடைகிறார் என அரிவாட்டாய நாயனாருக்கு சிவபெருமான் அருளியதைக் காண முடிகிறது.

மாணிக்கவாசகரும்,

**அரியானே யாவர்க்கும்**
**அம்பரவா அம்பலத்தெம்**
**பெரியானே[7]**

என்றும்,

**அறிவானும் தானே அறிவிப்பால் தானே**
**அறிவாய் அறிகின்றான் தானே அறிகின்ற**
**மெய்பொருளும் தானே விரிசுடர் பார் ஆகாயம்**
**அப்பொருளும் தானே அவன்[8]**

என காரைக்கால் அம்மையாரும் மிகவும் உணர்ந்தே சிவபெருமானாய்ப் பற்றிக் கூறிய வார்த்தைகள் இவ்வுலகில் உள்ளவரை ஈசனின் புகழைப் பரப்பக் கூடியவை.

அவனருளாலே அவன் தாள் வணங்கி என்பதைப் போல அரிவாட்டாய நாயனாரைப் பற்றி எடுத்துரைக்க இந்த நற்பேறு எனக்குக் கிட்டியது.

*தென்னாடுடைய சிவனே போற்றி!*
*எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!*

## அடிக்குறிப்புகள்

1. பெரியபுராணம் பாடல் எண்- 915
2. பெரியபுராணம் பாடல் எண்- 923
3. திருக்குறள், அன்புடைமை குறள் எண். 71
4. பெரியபுராணம் பாடல் எண்- 925
5. பெரியபுராணம் பாடல் எண்- 928
6. மேலது
7. திருவாசகம் - திருச்சதகம் பாடல் எண். 18
8. அற்புதத்திருவந்தாதி பாடல் எண். 20

## துணைநூற்பட்டியல்

1. நடராஜன் பி.ரா. திருஞானசம்பந்தர்சுவாமிகள்தேவாரம், மூன்றாம்பகுதி, உமாபதிப்பகம், சென்னை, டிசம்பர் - 2010
2. பானுமதிரமே;, சைவம்வளர்த்ததமிழ், நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ், சென்னை - 2011
3. புலியூர்கேசிகன், திருவாசகம், மங்கை வெளியீடு, சென்னை - 2016